பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 03 வெள்ளிக்கிழமை 16.04.2021 கதிர் 30

## கிளிநொச்சியில் தொடர்கின்றன உயிர்ப் பலிகள்

கிளிநொச்சிப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சியிலுள்ள கோணாவில் மத்தி பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

☞2

# வடமராட்சியில் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச்சூட்டில் 2 இளைஞர்கள் படுகாயம்!

## சட்டவிரோத மணல் கடத்தல்காரார்கள் என்கின்றது பொலிஸ்



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்., வடமாராட்சி, முள்ளிப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சட்டவிரோத மணல் கடத்தலைத் தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் போதே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது எனப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் பகுதியிலிருந்து வந்த வாகனமொன்றை நிறுத்துமாறு விசேட அதிரடிப்படையினர் உத்தரவிட்ட நிலையில், அதனையும் மீறி அந்த வாகனம் பயணித்தபோது அதிரடிப்படையினரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனபோதும், வாகனம் நிறுத்தப்படாது தொடர்ந்தும் பயணித்துள்ளது எனவும்,

☞2

# தொலைபேசி மூலம் என்னை அச்சுறுத்தினார் ஜனாதிபதி!

## உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என பொலிஸிடம் விஜயதாஸ முறைப்பாடு





தொலைபேசி மூலமாக இன்று காலை அழைப்பை ஏற்படுத்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மிகவும் கீழ்த்தரமான முறையில் - என்னை அச்சுறுத்தும் வகையில் ஆத்திரமடைந்து பேசினார். ஜனாதிபதியின் இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக பொலிஸ்மா அதிபரிடம் முறையிடவுள்ளேன்.

இவ்வாறு இன்று பகல் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

☞2

# குருந்தூர்மலையில் இந்துக்கள் வழிபட நடவடிக்கை எடுப்போம்!

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



முல்லைத்தீவு – தண்ணிமுறிப்புப் பகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக வழிபாட்டுத் தலமான குருந்தூர்மலையில், இந்து மக்கள் வழிபடுவதற்கான முழு உரித்தையும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

☞2

## 11 பிடியாணைகளுடன் சிக்காமல் டிமிக்கி கொடுத்த நபர் மாட்டினார்

இரண்டு திறந்த பிடியாணை உட்பட 11 நீதிமன்ற பிடியாணை உள்ள பலோ கில்லாடியை யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்று கையும்களவுமாகக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் யாழ். கொட்டடி பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பல பாரிய குற்றங்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் குறித்த நபருக்கு எதிராகப் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்நிலையில், அவர் வழக்குத் தவணைகளுக்கு நீதிமன்றத்துக்குச் சமூகமளிக்காமல் டிமிக்கி கொடுத்து வந்துள்ளார். இதனால் அவருக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றங்களால் 11 பிடியாணை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. இதில் 2 திறந்த பிடியாணைகளும் வழங்கப்பட்டிருந்தன.

குறித்த நபரைக்

☞2

## 'நான் வீழ்வேனென்று நினைத்தாயோ' இளைஞர் மாநாட்டில் சாணக்கியன்



மலையக மக்கள் முன்னணியின் இளைஞர் அமைப்பான மலையக இளைஞர் முன்னணியின் மாநாடு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நுவரெலியா சினிசிட்டா அரங்கில் நடைபெறவுள்ளது.

முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் மாமனிதர் சந்திர

☞2

## தேரர்கள் அரசியலில் தலையிடுவதை தடுத்தால்தான் இலங்கை உருப்படும்

### மனோகணேசன் வலியுறுத்து



பெங்கமுவே நாலக தேரர், அஸ்கிரிய அனுநாயக தம்மானந்த தேரர், ரத்தன தேரர், முருத்தெட்டுவே ஆனந்த தேரர், சிங்கள ராவய தேரர், ஞானசார தேரர், ராவண பலய தேரர் ஆகிய பௌத்த தீவிரர்கள், இப்போது புதிய பாடல் ஒன்றைப் பாடுகிறார்கள். இந்த அரசு தமது பௌத்த அமைப்புகளைத் தடை செய்யப் போகிறது என்ற புரளியைக் கிளப்பி மக்களின் கவனத்தைத் திசை திருப்புகின்றார்கள். உண்மையில் இந்த நாடு உருப்பட வேண்டுமானால், பௌத்த தேரர்கள் அரசியலில் தலையிடுவதைத் தடை

☞2

## அதிர்கின்றது கொழும்பு அரசியல்: மைத்திரி பக்கம் சாய்கிறார் எஸ்.பி.?



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள மைத்திரிபால

☞2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர்மலையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருந்தூர்மலையில் தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் வழக்கொன்றைத் தொடர்வது தொடர்பில், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்றுப்பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் அன்று வழக்குத் தொடர்வதற்கான ஆவணங்கள் சிலவற்றைக் கையளித்திருந்தனர். இந்நிலையில், இதன் தொடர்ச்சியாக இன்று முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப் பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் மீண்டும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்து வழக்குத் தொடர்வது தொடர்பான முக்கிய ஆவணங்கள் சிலவற்றைக் கையளித்தனர்.

இந்தச் சந்திப்பையடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலை சம்பந்தமாக சில வருடங்களுக்கு முன்பிருந்தே ஒரு பிணக்கு ஏற்பட்டது. அது தொடர்பாக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்திலே வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு அதிலே ஓர் இணக்கப்பாடு எய்தப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தொல்லியல் திணைக்களத்தினர், அமைச்சரோடு வந்து அங்கே இருந்த வழிபாட்டுச் சின்னத்தை அகற்றி ஒரு புத்தர் சிலையை வைத்து புதியதாக தொல்பொருள் ஆராய்ச்சி என்று ஆரம்பித்துள்ளார்கள்.

ஆகையினாலே இது தொடர்பாக வழக்கு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்காக, கடந்த 2018ஆம் அண்டு தாக்கல்செய்யப்பட்ட AR/673/18 என்ற வழக்கின் ஆவணப் பிரதியை முழுமையாக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் என்னிடம் கையளித்திருக்கின்றார்.

அந்தவகையில் இது தொடர்பான அடுத்தடுத்த நடவடிக்கைகள், அதாவது அந்த இடத்திலே இந்து மக்கள் சென்று வழிபடுவதற்கான முழு உரித்தையும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம் – என்றார்.

## தொலைபேசி மூலம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வித விளக்கமும் வழங்கப்படவில்லை. இரகசியமாகவே அது கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, இந்தச் சட்டமூலத்தால் நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகளை நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் அம்பலப்படுத்தியிருந்தேன். கொழும்புத் துறைமுக நகரம் சீனாவின் தனிநாடாகும் நிலைமையைத் தடுக்க வேண்டும் எனவும் கூறியிருந்தேன்.

இந்தநிலையில், இன்று காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எனக்கு அழைப்பை ஏற்படுத்தினார். மிகவும் கீழ்த்தரமான முறையில் – என்னை அச்சுறுத்தும் வகையில் ஆத்திரமடைந்து பேசினார். ஜனாதிபதி ஒருவருக்குப் பொருத்தமற்ற விதத்தில் அவர் பேசினார். அவர் கையாண்ட பாஷையிலேயே நானும் பதில் கொடுத்தேன். ஜனாதிபதி இவ்வாறு அச்சுறுத்துவது பாரதூரம். எனக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியின் இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக பொலிஸ்மா அதிபரிடம் முறையிடவுள்ளேன் – என்றார்.

## வடமராட்சியில் விசேட ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் சூட்டுக் காயங்களுடன் இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய விசாரணை நடத்தப்பட்டபோது, அவர்கள் இருவரும் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்துள்ளமை தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலையைச் சேர்ந்த 23 மற்றும் 26 வயதுடைய இளைஞர்கள் இருவரே இவ்வாறாக காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, துப்பாக்கிச்சூடு நடத்தப்படும்போது இவர்கள் பயணித்த வாகனம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும், இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

## 11 பிடியாணைகளுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்வதற்கு யாழ். மாவட்ட பொலிஸ் நிலையப் பொலிஸார் முயன்ற போதும் அவர்களிடம் சிக்காமல் தலைமறைவாகியிருந்த நிலையில் குறித்த நபரைக் கைதுசெய்யும் வகையில் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தமக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குறித்த நபரை யாழ். கொட்டடிப் பகுதியில் வைத்து நேற்று மாலை 7 மணியளவில் கைதுசெய்தனர்.

இந்தக் கைது நடவடிக்கைகள் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு உப சப் இன்ஸ்பெக்டர் பிரதீப் தலைமையிலான குழுவால் முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

## கிளிநொச்சியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதே இடத்தைச் சேர்ந்த செல்வநாயகம் விதுசன் (வயது -25) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்–

குறித்த இளைஞர் வீட்டின் பின்பகுதியின் கூரையில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். மேலும் இவர் தற்கொலை செய்து கொண்டமைக்கான காரணம் தெரியவரவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, கடந்த வாரம் இதே பகுதியைச் சேர்ந்த திருமணமான இளம் யுவதி ஒருவரும் தீயிட்டு தற்கொலை செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சமீப காலமாக தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக இளம் சமூகத்தினர் அதிகளவில் தற்கொலை செய்துகொள்கின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## அதிர்கின்றது கொழும்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேனவின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது இருவரும் மனம்விட்டு பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

எஸ்.பி. திஸாநாயக்க, நல்லாட்சியின் போது மைத்திரிபால சிறிசேனவின் விசுவாசியாகவே செயற்பட்டார். இதனால் தான் பொதுத்தேர்தலில் தோல்வியுற்றிருந்தாலும் தேசியப்பட்டியல் ஊடாக எஸ்.பிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு அமைச்சுப் பதவியையும் மைத்திரி வழங்கினார்.

எனினும், மைத்திரிபாலவுக்கு நெருக்கடி ஏற்பட்டு, ராஜபக்ஷ அலை மீண்டும் உருவானபோது, மைத்திரியை கைவிட்டு ராஜபக்ஷக்களுடன் எஸ்.பி. சங்கமித்தார். இதனால் சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் நீக்கப்பட்டார்.

2020இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், நுவரெலியா மாவட்டத்தில் 'மொட்டு' கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தாலும் எஸ்.பிக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகூட வழங்கப்படவில்லை. அரசியலில் நெடுநாள் அனுபவம் கொண்ட – பல அமைச்சுப் பதவிகளை வகித்த எஸ்.பிக்கு மாவட்ட தலைவர் பதவி மட்டும் வழங்கப்பட்டமை பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

அதேபோல் அண்மைக்காலமாக அரசியன் செயற்பாடுகளையும் அவர் விமர்சித்து வருகின்றார். எனவே, விரைவில் அவர் சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணையக்கூடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. எஸ்.பியுடன் செல்வதற்கு சில மாகாண சபை உறுப்பினர்களும் தயார் நிலையில் இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தேரர்கள் அரசியலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யத்தான் வேண்டும். நான் இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரிப்பேன். ஆனால், இந்த அரசு இப்போது இவர்களைத் தடை செய்து தற்கொலை செய்யப் போவதில்லை.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் அரசியல்வாதிகள், குறிப்பாக முன்னாள் அமைச்சர்கள் ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் மீது, உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட வேண்டும் என மேற்படி பௌத்த தேரர்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால், அதற்கான சாட்சியம் இல்லை. அப்படி சாட்சியங்கள் இருந்தால், இந்த அரசே சும்மா விடாது.

தேரர்களிடம் சாட்சியம் இருந்தால் அதை விசாரணை கமிஷனிடம் அவர்கள் தர வேண்டும். ஆனால், அப்படி இவர்களிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை.

தமிழ், முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம் மட்டுமே இருக்கின்றது. தமிழ், முஸ்லிம் அடிப்படைவாதம் பற்றிப் பேசும் இவர்கள் தமது அடிப்படைவாத, இனவாதத்தை தேசபக்தியாகக் காட்டுகின்றார்கள்.

ஆகவே இன்று, அரசின் பிரதான கட்சியில் உள்ள தீவிரவாதிகளையும், விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உள்ளிட்ட நபர்களையும் கொண்டு, எதிரணியிலும் சிங்கள பௌத்த தீவிரர்கள் கிடைத்தால், அவர்களையும் சேர்த்து, இந்த அரசின் மீதான சிங்கள மக்களின் அதிருப்தியைத் திசை திருப்பி, மீண்டும் ஒருமுறை சிங்கள பௌத்த அரசு ஒன்றை அமைக்க முயல்கின்றார்கள். அதாவது இன்னொரு ரவுண்ட் வர முயல்கிறார்கள்.

இனிவரும் மாற்று அரசு, ஒரு சிங்கள பௌத்த அரசாக இருப்பதை நாம் ஏற்க முடியாது. உலகமும் ஏற்காது. அது ஓர் இலங்கை (ஸ்ரீலங்கா) அரசாக மட்டுமே இருக்க முடியும்.

இல்லாவிட்டால் அடுத்த இரண்டு வருடத்தில், இலங்கை நாடு அரசியல், சமூக, பொருளாதார துறைகளில் தோற்றுப்போன நாடாக உலகில் ஒதுக்கப்படும். அதன்பின்னர் சாம்பலில் இருந்து எழுந்துவர வேண்டியதுதான் – என்றார்.

## 'நான் வீழ்வேனென்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேகரனின் ஜனன தினத்தை முன்னிட்டு 'நான் வீழ்வேனென்று நினைத்தாயோ' என்ற தொனிப்பொருளில் இந்த இளைஞர் மாநாடு நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

## கொரோனாவிலிருந்து 303 பேர் மீட்டனர்

நாட்டில் மேலும் 303 பேர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டோரின் மொத்த எண்ணிக்கை 92 ஆயிரத்து 611 ஆகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் இது வரை 95 ஆயிரத்து 949 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதுடன் இன்னும் இரண்டாயிரத்து 730 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

மேலும், கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 608 ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் ஊழல் மோசடிகளுக்கு வழிவகுக்கும்

### ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் சுட்டிக்காட்டு

அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்தின் விளைவாக ஊழல் மோசடிகள் இடம்பெறக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன எனக் குறிப்பிட்டு, அதற்கு எதிராக ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

மேற்படி சட்டமூலத்தின் கூறுகள், அரசமைப்பின் முக்கிய சரத்துக்களை மீறும்வகையில் அமைந்திருக்கின்றன எனவும் அவை நிதிப்பாய்ச்சல்களை இலகுவாக்குவதன் விளைவாக நிதி மோசடிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதாகவும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெனல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை துறைமுக நகரத்தில் அமைக்கப்படவுள்ள வணிக, வர்த்தகக் கட்டமைப்புக்களின் உரிமையாளர்கள் யார் என்பது தொடர்பில் போதிய வெளிப்படைத்தன்மை பேணப்படவில்லை என்றும் அத்தகைய தகவல்களைப் பெறக்கூடியதாக இருப்பது ஊழல் மோசடிகள் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் துறைமுக நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள வங்கிகளின் நடவடிக்கைகளில் போதிய வெளிப்படைத்தன்மை பேணப்படாமை, நாட்டின் ஏனைய வங்கிகள் மீது பிரயோகிக்கப்படும் சட்டங்களிலிருந்து விலகிச்செயற்படுவதற்கு அவற்றுக்கு இடமளிக்கும் என்றும் அது நாட்டில் இரகசிய அதிகார வரம்பு ஒன்றை உருவாக்கும் என்றும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# எது இனவாதம்?

சமூக ஊடகங்கள் மூலம் இனவாதக் கருத்துக்களைத் தூண்டினால் தண்டிக்கப்படுவீர்கள் எனப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

"பௌத்த, சிங்கள மக்களின் வாக்குகளினால் மட்டுமே நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டேன். ஆகவே முதலில் நான் அவர்களின் ஜனாதிபதி" என்று பெருமிதம் பேசும் ஒரு ஜனாதிபதியின் ஆட்சி அதிகாரத்தில், அவரது தளபதி போல செயற்படும் பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர என்ற முன்னாள் படைத் தளபதி இந்த விடயத்தை முன்வைத்திருக்கின்றார்.

பௌத்த – சிங்களப் பேரினவாதத்தைக் கிளப்பி, அதை விஸ்வரூபம் எடுக்க வைத்து, அதில் அரசியல் குளிர் காய்ந்து, செல்வாக்கு லாபம் பெற்று, அதிகாரத்துக்கு வந்திருக்கும் தரப்பு இனவாதக் கருத்துக்களைத் தூண்டினால் தண்டனை என்று பேசுகின்றது.

இது, சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது.

இலங்கையிலேயே பிரதான பிரச்சினை சொற்களுக்கு அர்த்தம் கற்பிப்பது அல்லது கற்பிதம் செய்வதுதான்.

நாட்டில் சட்டம் மாறாமல் இருக்கும். ஆனால் ஆட்சி மாறும் போது சட்டத்தின் பிரயோக முறைமை மாறும்.

ஆட்சிக்கு வருவோர் தம் விருப்பப்படி சட்டச் சொல்லாடல்களுக்கு அர்த்தம் கற்பித்து, சட்டத்தைத் தமக்கேற்றபடி வளைத்து அட்டகாசம் புரிவது இலங்கையின் நீதித்துறையின் தனிச் சிறப்பு.

யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளுக்கு விளக்கேற்றி நினைவு கூர்வது நல்லாட்சி அரசில் நல்லிணக்கத்துக்கான படிமுறையாக மதிக்கப்பட்ட விடயம். அதுவே ராஜபக்ஷக்களின் ஆட்சி அதிகாரத்தில் பயங்கரவாதத்தின் மீளுருவாக்கம் அல்லது புலிகளை அஞ்சலி செய்து ஏத்தும் செயல்.

நல்லாட்சி அரசின் கீழ் முள்ளிவாய்க்காலில் நினைவு கூரலை மேற்கொள்ளலாம். மக்கள் உயிரிழந்த தமது உறவுகளுக்காகப் பகிரங்கமாக நினைவேந்தல் செய்யலாம். அமைதி வழியில் – அஹிம்சைப் பாதையில் – காந்தீய நெறியில் – போராடிய தியாகி திலீபன், அன்னை பூபதி போன்றோரை மதித்துப் போற்றி அஞ்சலிக்கலாம்.

ஆனால் கோட்டாபயவின் கொடுங்கோல் ஆட்சியில் இவை எல்லாம் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள்.

இரண்டு ஆட்சிகளுக்கும் இடையில் சட்டங்கள் பெரிதாக மாறி விடவில்லை. சட்ட வியாக்கியனாங்கள்தாம் மாறி விட்டன.

ஒவ்வொரு அரசும் தாம்தாம் அணிந்திருக்கும் கண்ணாடிகளுக்கு ஏற்ப விடயங்களை நோக்குகின்றன. அவ்வளவுதான்.

'சமஷ்டி' என்றாலே பிரிவினை என்று உலக அரசியல் சொல்லாடல் நெறி முறைக்கே புது அர்த்தம் கற்பிக்கும் முட்டாள்தனமான அதிகார பீடம் 'இனவாதம்' என்று எதை அர்த்தப்படுத்தி, நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பதுதான் கேள்வி.

அடிப்படை மனித உரிமை மீறல்களுடன் நேரடியாகத் தொடர்புபட்ட பல வழக்குகளில் இருந்து படை அதிகாரிகளைக் காப்பாற்றுவதற்காக, ஜனாதிபதி ஆணைக்குழு மூலம் சட்டத்தை வளைத்து, நாடாளுமன்றத்தில் சட்டப் பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றி, நாட்டின் நீதிமுறைமையையே கேலிக் கூத்துக்குள்ளாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இந்த ஆட்சிப் பீடம், இனவாதத்தைத் தூண்டினால் சட்ட நடவடிக்கை என்று கூறுவது அபஸ்வரம் போலப் படுகின்றது.

மக்கள் – குறிப்பாக சிறுபான்மை மக்கள் – அதுவும் தமிழ் மக்கள் – தமது வரலாற்றுத் தாயக பூமியில், காலம் காலமாகத் தாம் பேணி வரும் தனித்து உரிமைகளை – வழக்காறுகளை – பண்பாட்டு விழுமியங்களை – நாகரிகக் கோலங்களை – நிலைநிறுத்திப் பேண எடுக்கும் முயற்சிகளைக் கூட இந்த அரசு இனவாதத்தைத் தூண்டும் நடவடிக்கைகளாக அர்த்தப்படுத்தி, வியாக்கியானம் செய்து, தனது அடக்குமுறையை ஏவி விடும் என்ற பொதுவான அச்சம் மக்களுக்கு உண்டு.

தமிழர்களின் உரிமை தொடர்பான நிகழ்வு எதற்கும் கொரோனாத் தொற்றுத் தடுப்பு சம்பந்தமான சுகாதாரக் கட்டுப்பாடு விதிகளை ஏவி விட்டு முடக்குப் போடும், இந்த பௌத்த – சிங்களப் பேரினவாத வெறிப் போக்கு ஆட்சிப் பீடம், இனிமேல் தமிழர்களின் நியாயமான போராட்ட நடவடிக்கைகளை எல்லாம் இனவாதத்தைத் தூண்டும் நடவடிக்கையாகக் கற்பிதம் பண்ணி அதன் மீது தனது உத்தேச புதிய சட்டத்தை ஏவி விடும் என்பதும் எதிர்பார்க்கக் கூடியதே.

இனவாதத்தை விதைக்கும் நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும் என்பது சரிதான். ஆனால் எது 'இனவாதம்' என்பதை உரைத்துப் பார்க்கும் அதிகாரம், பேரினவாத வெறியில் திளைத்து நிற்கும் கோட்டா அரசின் கையில் சிக்குவதுதான் ஆபத்தானது. அது, குரங்கின் கைப் பூமாலையாகா விட்டால் சரி...!

# எதிலும் அரசியல் கலந்திருப்பதே சமூகம் அவஸ்தைப்படக் காரணம்

## நஸீர் அஹமட் சுட்டிக்காட்டு



எங்கும், எதிலும் அரசியல் கலந்திருப்பதே தற்போது நமது சமூகம் அவஸ்தைப்படுவதற்குக் காரணமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் இளம் தாரகை விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், ஏறாவூரின் அரசியல் முன்னோடிகளான முன்னாள் விசேட ஆணையாளர் மர்ஹூம் எம்.ஏ.சி. அப்துல்றஹ்மான் மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் வைத்தியர் பரீட் மீராலெப்பை ஆகியோரின் நினைவாகவும் நடத்தப்பட்ட கிரிக்கெட் இறுதிச் சுற்றுப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதனை கூறியுள்ளார்.

ஏறாவூர் அலிகார் தேசிய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை போட்டியின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் –

நாங்கள் எல்லாவற்றிலும் அரசியலை மாத்திரம் மையமாக வைத்து சமூகத் தீர்மானங்களை எடுத்து வந்துள்ளோம். இதுவொரு பாரம்பரியமாக இடம்பெற்று வந்துள்ள நிகழ்வாகும்.

எங்களுடைய சமூக அரசியல் தலைமைகள் இவ்வாறான அரசியல் நிலைப்பாட்டை எடுத்ததன் காரணமாக இப்பொழுது ஒட்டுமொத்த சமூகமும் இந்த சிந்தனைக்குள் அகப்பட்டு அவஸ்தைப்பட வேண்டியுள்ளது.

இதனைப் புரிந்துகொண்டு எங்களை நாங்கள் கண்ணாடியில் பார்க்க வேண்டியுள்ளது. அரசியலை மையமாக வைத்து அனைத்தையும் அணுகும் அசிங்கமான போக்கை மாற்றியமைக்க வேண்டும்.

தேர்தல் முடிந்த கையோடு அரசியலை விட்டு விடவேண்டும். எல்லாவற்றிலும் அரசியலைக் கலப்பதால் ஆன பயன் ஏதுமில்லை. இது பற்றி ஒட்டுமொத்த சமூகத்திலுள்ள அமைப்புக்களும் தனி நபர்களும் சிந்திக்க வேண்டும்.

சமீபத்தில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் மிக நீண்ட நேரம் பேசக் கிடைத்தது. கிழக்கில் இளைஞர்களை எவ்வாறு அணி திரட்டி நாட்டின் தேசிய அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்ய முடியும் என்பது பற்றி விவாதித்தோம்.

விளையாட்டு அமைச்சர் நாமல் தற்போது குருநாகலில் முன்னெடுக்கப்படும் செயற்திட்டத்தை மட்டக்களப்பிலும் நடத்தவேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதற்குத் தான் மட்டக்களப்பில் தங்கியிருந்தாவது அலுவல்களைக் கவனிப்பேன் எனக் கூறியுள்ளார். இவ்வாறான ஓர் அமைச்சர் எங்களுக்குக் கிடைத்துள்ளது மிகப் பொருத்தமான வாய்ப்பாகும்.

ஏறாவூரில் தொழில் இல்லாத இளைஞர்கள், அங்கவீனர்கள், விதவைகள் அதிகம் உள்ளனர். ஒவ்வொருவருடைய பிரச்சினைகளும் அடையாளப்படுத்தப்பட்டுத் தீர்க்க வேண்டும்.– எனத் தெரிவித்துள்ளார்.

# ஐஸ் போதையுடன் ஒருவர் கைதானார்

வத்தளை ஹுனுபிட்டி பகுதியில் 2 கிலோவுக்கும் அதிகம் எடைகொண்ட 'ஐஸ்' போதைப் பொருளுடன் ஒருவர் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐஸ் போதைப்பொருள் தொடர்பாக வத்தளை பகுதியில் நடந்து வரும் சோதனைகளின் விளைவாக கைதுசெய்யப்பட்ட 13 ஆவது சந்தேக நபர் இவர் ஆவார்.

கடந்த சனிக்கிழமை 113 கிராம் ஐஸ் மற்றும் 101 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவரும், ஞாயிற்றுக்கிழமை 15 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நான்கு சந்தேக நபர்களும் ஜா – எல பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

அதேபோல் மேலும் 5 சந்தேக நபர்கள் திங்களன்று சபுகஸ்கந்த பகுதியில் 110 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருடன் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களிடம்மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே தற்சமயம் ஹுனுபிட்டி பகுதியில் 28 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதன்படி, ஏப்ரல் 10 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தமாக 13 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், இதன்போது 128 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

## பதுளையில் விபத்து:

# ஒருவர் சாவு; 13 பேர் காயம்

பதுளை – கந்தகெட்டிய – போபிட்டிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் காயமடைந்துள்ளனர்.

வான் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்தமை காரணமாகவே கடந்த வியாழக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 13 பேரில் ஐந்து சிறுவர்கள் உள்ளடக்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து குறித்து வழக்குப் பதிவுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நீதிமன்றத்தை நாடியுள்ள 6 கட்சிகளின் நடவழக்கைகள் தற்காலிகமாக நிறுத்தம்

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.06

கட்சிகளுக்குள் காணப்படும் கொள்கை முரண்பாடு காரணமாக நீதிமன்றத்தை நாடியுள்ள கட்சிகளின் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் நீதிமன்றங்களை நாடியுள்ள 6 கட்சிகள் இனம்காணப்பட்டுள்ளன என ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளுக்குள் இருந்துவரும் கொள்கை முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள நீதிமன்றம் சென்றுள்ள கட்சிகளின் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்திருக்கின்றது. இவ்வாறு 6 கட்சிகள் நீதிமன்றம் சென்றிருக்கின்றமையை அறிந்திருக்கின்றோம்.

குறித்த கட்சிகளின் செயலாளர், தலைவர் பதவி உட்பட பல பதவிகளுக்கு பல நபர்கள் முன்வருகின்றமையால் சட்டப்பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் அந்த கட்சிகளின் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள நீதிமன்ற நடவடிக்கைக்கு சென்றிருக்கின்றன. அதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடையும் வரை அந்தக் கட்சிகளின் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கத் தீர்மானித்திருக்கின்றோம்.

மேலும் குறித்த கட்சிகளின் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடையும்வரை அந்தக் கட்சிகளுக்கு எதிர்வரும் தேர்தல்களில் பங்கேற்கும் சந்தர்ப்பம் இல்லாமல்போகும்.

குறித்த கட்சிகளின் நன்மதிப்புக்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தால் அவற்றின் பெயர்களை வெளிப்படுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஒரே நாளில் மிகுதித் தேர்தலை நடத்தி முடிக்கும் முதல்வர் மம்தாவின் கோரிக்கை நிராகரிப்பு

294 தொகுதிகளைக் கொண்ட மேற்குவங்க சட்டசபைக்கு 8 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. ஏற்கனவே 135 தொகுதிகளுக்கு 4 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றுள்ளது. எஞ்சிய 159 தொகுதிகளுக்கு 4 கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது.

5 ஆம் கட்டமாக 45 தொகுதிகளுக்கு ஏப்ரல் 17 இலும், 6 ஆம் கட்டமாக 43 தொகுதிகளுக்கு ஏப்ரல் 22 இலும், 7 ஆம் கட்டமாக 36 தொகுதிகளுக்கு ஏப்ரல் 26 இலும், இறுதியாக 8 ஆம் கட்டமாக 35 தொகுதிகளுக்கு ஏப்ரல் 29 ஆம் திகதியும் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 2 ஆம் திகதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

மேற்குவங்கத்தில் தேர்தலின்போது வன்முறைச் சம்பவங்கள் அதிக அளவில் நடைபெற்றுதால் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தேர்தல் 8 கட்டங்களாக நடத்தப்படுகிறது என்று தேர்தல் ஆணையகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மேற்குவங்கத்தில் எஞ்சிய 4 கட்டத் தேர்தலையும் ஒரேநாளில் நடத்த வேண்டும் என்று மாநில முதலமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி தேர்தல் ஆணையத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளார். மேற்குவங்களத்தில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் மக்களை பாதுகாக்கும் வகையில் எஞ்சிய 4 கட்ட தேர்தல்களையும் ஒரேநாளில் நடத்த வேண்டும் என மம்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'பெருந்தொற்று பரவி வரும் நிலையில் மேற்குவங்காளத்தில் 8 கட்டங்களாக தேர்தல் நடத்தும் தேர்தல் ஆணையத்தின் முடிவுக்கு



நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறோம். தற்போது, கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில், எஞ்சிய 4 கட்ட தேர்தலையும் ஒரேநாளில் நடத்த வேண்டும் என தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை விடுக்கிறேன். இது கொரோனா பரவலில் இருந்து மக்களை காப்பாற்றும்' என தெரிவித்துள்ளார்.

ஆனால், அவரது கோரிக்கையை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது. மேற்கு வங்கத் தேர்தலில் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தை இன்று தேர்தல் ஆணையம் கூட்டியுள்ளது. ஒவ்வொரு கட்சியில் இருந்தும் ஒரு பிரதிநிதியை மட்டும் அனுப்புமாறு தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

# விவேக் மருத்துவமனையில் அனுமதி

சாலிகிராமத்தில் உள்ள வீட்டில் இருந்த நகைச்சுவை நடிகர் விவேக்குக்கு நெஞ்சுவலி மற்றும் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, அவரது மனைவியும் மகளும் அவரை வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள விவேக்கின் உடல்நிலையை மருத்துவர்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர் எனவும் அவருக்கு எக்மோ சிகிச்சை அளிக்கப்படுகின்றனது என வும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் விரைந்து குணமாக திரை பிரபலங்கள் வாழ்த்துகளை தெரிவித்து வரும் நிலையில் கவிஞர் வைரமுத்து தனது டுவிட்டர் பக்கத்தில் 'சின்னக் கலைவாணர் தம்பி விவேக் விரைந்து நலமுற்று மீள வேண்டும் மனிதர்களின் மாரடைப்பைத் தடுக்கின்ற நகைச்சுவைக் கலைப்பணியைவாழ்நாளெல்லாம் தொடர வேண்டும். வாழ்த்துகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.



அதேசமயம், அவரது உடல்நிலையை கொரோனா தடுப்பூசியுடன் தொடர்புபடுத்தி விமர்சனங்களும் எழுந்து வருகின்றன. இந்நிலையில், நடிகை குஷ்பு தனது டுவிட்டர் பக்கத்தில் விவேக் நேற்று தடுப்பூசி போட்டதையும் இன்று அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதையும் தொடர்புபடுத்த வேண்டாம். இரண்டுக்கும் எந்த தொடர்பும் இல்லை. மருத்துவர்கள் தங்கள் கடமையை செய்யட்டும். தயவு செய்து தடுப்பூசி போடுங்கள். வதந்திகள் மற்றும் அனுமானங்களை நம்பவேண்டாம் என்று கூறியுள்ளார்.

# ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி ஏப்ரல் மாத இறுதியில்

கடந்த ஆண்டு உலகின் முதல் கொரோனா தடுப்பூசியாக ஸ்புட்னிக் – வி தடுப்பூசியை ரஷ்யா உருவாக்கியது. இந்தத் தடுப்பூசியை இந்தியாவில் இறக்குமதி செய்து விநியோகிக்கும் உரிமையை ஹைதராபாத்தைச் சேர்ந்த டொக்டர் ரெட்டிஸ் லேபரட்டரீஸ் நிறுவனம் பெற்றுள்ளது.

இந்தத் தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டுக்கு அனுமதிக்கலாம் என்ற பரிந்துரையை மத்திய மருந்து தர கட்டுப்பாட்டு அமைப்பின் நிபுணர்கள் குழு வழங்கியது. அதை ஏற்றுக்கொண்டு, தனது ஒப்புதலை இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு தலைமை இயக்குநர் நேற்று முன்தினம் வழங்கினார்.

இதன்மூலம் இந்தியாவில் 85 கோடி டோசுக்கும் அதிகமான ஸ்புட்னிக் – வி தடுப்பூசி உற்பத்தி செய்யப்படும். இதன்மூலம் உலகமெங்கும் ஆண்டுக்கு 42.5 கோடி மக்களுக்கு தடுப்பூசி செலுத்திட முடியும் என்று ரஷ்ய நேரடி முதலீட்டு நிதியத்தின் தலைமைச்செயல் அதிகாரி க்ரில் டிமிட்ரீவ் தெரிவித்துள்ளார். இந்நிலையில், ஏப்ரல் மாத இறுதியில் ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி கொரோனா தடுப்பு மருந்து இந்தியாவிற்கு வழங்கப்படும் என்று ரஷ்யத் தூதரகமும் தகவல் தெரிவித்துள்ளது.

# விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் இஸ்ரோவுக்கு பிரான்ஸ் ஆய்வு நிறுவனம் உதவி



விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் இந்தியாவின் ககன்யான் திட்டத்துக்கு பிரான்ஸ் உதவுகிறது. இதற்காக ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகி இருக்கிறது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ விண்வெளிக்கு மனிதர்களை அனுப்ப நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ககன்யான் என பெயரிடப்பட்ட இந்தத் திட்டத்தை நாடு விடுதலை பெற்ற 75 ஆவது ஆண்டையொட்டி 2022 இல் நிறைவேற்ற வேகமாகப் பணிகள் நடந்து வருகின்றன. கடந்த 2018 ஆம் ஆண்டு தொடங்கிய இந்தப் பணிகள் கொரோனா பொது முடக்கத்தால் தாமதமாகி வருவதாகக் கூறப்பட்டது. எனினும் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிட இஸ்ரோ நடவடிக்கை களை விரைவுபடுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்தியாவின் இந்த மைல்கல் திட்டத்துக்கு உதவும் வகையில் இஸ்ரோ மற்றும் பிரான்ஸின் விண்வெளி ஆய்வு நிறுவனமான சி.என்.இ.எஸ். இடையே ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகி இருக்கிறது. இந்தியா வந்துள்ள பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஜீன் – வெஸ் லி டிரையன் நேற்று இஸ்ரோ தலைமை அலுவலகத்துக்கு விஜயம் மேற்கொண்டபோது இந்த ஒப்பந்தம் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்த ஒப்பந்தப்படி ககன்யான் திட்டத்துக்கு பிரான்ஸ் பல்வேறு உதவிகளை வழங்கும். குறிப்பாக இந்திய விண்வெளி வீரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு பிரான்ஸ் விண்வெளி ஆய்வு மையங்களில் பயிற்சி அளிக்கப்படும். அத்துடன் பயணிகளுக்கான உணவு, ஊட்டச்சத்து திட்டம் பற்றிய தகவல்கள் பரிமாறுதல், சரிபார்ப்புப் பணிகள் போன்றவற்றை சி.என்.இ.எஸ். மேற்கொள்ளும். பிரெஞ்சு உபகரணங்கள், நுகர் பொருள்கள் மற்றும் மருத்துவக் கருவிகளை இந்திய வீரர்கள் பயன்படுத்துவது தொடர்பான அறிவியல் பூர்வ பரிசோதனைத் திட்டத்தையும் சி.என்.இ.எஸ். செயல்படுத்தும்.

சி.என்.இ.எஸ். உருவாக்கி சோதித்து சர்வதேச விண்வெளி மையத்தில் பயன்படுத்தப்பட்டுவரும் கருவிகள் இந்திய வீரர்களுக்கும் வழங்கப்படவுள்ளன. அதிர்வுகள், கதிரியக்கம் போன்றவற்றைத் தாங்குவதற்காக பிரான்சில் தயாரிக்கப்பட்ட தீப்பிடிக்காத பைகளை இந்திய வீரர்களுக்கு கிடைப்பதையும் இந்த ஒப்பந்தம் உறுதிசெய்திருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தில் பிரான்ஸ் வழங்கும் ஒத்துழைப்பை எதிர்காலத்துக்கும் நீடிக்க முடியும் என்றும் குறிப்பாக பெங்களூரில் விண்வெளி வீரர்களுக்கான பயிற்சி மையம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கும் பிரான்ஸின் உதவியைப் பெற முடியும் எனவும் சி.என்.இ.எஸ். தெரிவித்துள்ளது.

# சென்னை உயர்நீதிமன்ற வழக்கு விசாரணைகளை ஒன்லைன் மூலம் நடத்த தலைமைப் பதிவாளர் அறிவிப்பு

மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம், சத்தீஷ்கர், கர்நாடகம், கேரளா உள்ளிட்ட சில மாநிலங்களில் கொரோனாப் பரவல் அதிகமாக உள்ளது. தமிழகத்தில் கடந்த ஆண்டு ஜுலை 27 ஆம் திகதி அதிகபட்சமாக 6,993 பேருக்கு தொற்று அடையாளம் காணப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் வரை இதுதான் ஒரு நாளில் ஏற்பட்ட அதிகபட்ச தொற்று எண்ணிக்கையாக பதிவாகி இருந்தது. ஆனால், இந்த எண்ணிக்கை தற்போது அதிகரித்து 7,819 ஆக உயர்ந்திருக்கிறது.

சென்னையில் மட்டும் ஒரே நாளில் 2,564 பேருக்குத் தொற்று இனங்காணப்பட்டது. இது மேலும் உயரக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 10 சதவீத உயர்ச்சியில் கொரோனா பரவல் உள்ளதாக தரவுகள் கூறுகின்றன.

கொரோனாப் பரவல் காரணமாக, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரைக் கிளை இரண்டிலும் நாளை முதல் ஒன்லைன் மூலம் மட்டுமே வழக்கு விசாரணை நடைபெறும் என தலைமைப் பதிவாளர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவசிய வழக்குகள் என்று நீதிமன்றம் குறிப்பிடும் மற்றும் ஜாமீன் வழக்குகளில் மட்டும் அரசு வழக்கறிஞர்கள் நேரடியாக ஆஜராக வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து வழக்கு விசாரணையும் ஒன்லைன் மூலம் மட்டுமே நடைபெறும் எனவும் ஏப்ரல் 23 ஆம் திகதி வரை இந்த நடைமுறை தொடரும் எனவும் கூறப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய நாள் கொரோனா சூழல் குறித்து ஆய்வு செய்து அடுத்த கட்ட நடைமுறைகள் குறித்து உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீதிமன்றங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜியோடு அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், சுகாதாரத்துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் ஆகியோர் ஆலோசனை மேற்கொண்டிருந்தனர்.

# விமானப்படையின் மூன்று நாள் மாநாடு டெல்லியில் ஆரம்பம்



இந்திய விமானப்படை உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளும் மாநாடு நேற்று டெல்லியில் உள்ள விமானப்படை தலைமையகத்தில் தொடங்கியது. மூன்று நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டை அமைச்சர் ராஜ்நாத்சிங் ஆரம்பித்து வைத் தார்.

முதல் நாள் மாநாட்டில், கிழக்கு லடாக்கில் உள்ள சூழ்நிலை உட்பட நாடு சந்தித்து வரும் ஒட்டுமொத்த பாதுகாப்பு சவால்கள் குறித்து விமானப்படை உயர் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

நாடு சந்திக்கும் எதிர்காலச் சவால்களை கருத்திற்கொண்டு, விமானப்படையின் திறன்களை மேலும் அதிகரிப்பதற்கான கொள்கைகள் மற்றும் வியூகங்கள் குறித்தும் அதிகாரிகள் இந்த மாநாட்டில் ஆலோசனை நடத்துகிறார்கள். விமானப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்வாழ்வு நடவடிக்கைகள் பற்றியும் விவாதிக்கிறார்கள்.

மாநாட்டில், விமானப்படையின் பிராந்திய தலைமை அதிகாரிகள், முதன்மை அதிகாரிகள், தலைமை இயக்குநர்கள் அனைவரும் கலந்து கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறிய நாடுகளைச் சேர்ந்த 8 லட்சம் பேருக்கு இலவச தடுப்பூசி வழங்கும் நியூஸிலாந்து

வறிய நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் கீழ் உலக சுகாதார அமைப்புடன் ஐ.நா. இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காக நியூசிலாந்து அரசு 8 லட்சம் பேருக்கு இலவசமாக கொரோனாத் தடுப்பூசியை வழங்கவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

உலகில் உள்ள வறிய நாடுகளுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படுவதற்காக உலக சுகாதார அமைப்பு, ஐ.நா. அமைப்புகள் இணைந்து ஹவி தடுப்பூசி கூட்டமைப்பு என்ற பெயரில் அமைப்பு ஒன்றை தொடங்கியுள்ளன. இந்த அமைப்பின் மூலம் வறிய நாடுகளில் உள்ள சுகாதாரப்பணியாளர்களுக்கும் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தடுப்பூசி கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறன.

இதற்கிடையில், வளர்ந்த நாடுகள் தங்களிடம் உள்ள கூடுதல் கொரோனா தடுப்பூசிகளை ஏழைநாடுகளுக்கு வழங்க முன்வர வேண்டும் என ஐ.நா. மற்றும் உலக சுகாதார அமைப்புகள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஹவி தடுப்பூசி அமைப்பிற்கு நியூஸிலாந்து அரசு இலவசமாக தடுப்பூசி வழங்க உள்ளது என அறிவித்துள்ளது.

கோவாக்ஸ் என பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் கீழ் வறிய நாடுகளில் 8 லட்சம் பேருக்கு இலவசமாக கொரோனாத் தடுப்பூசி வழங்க உள்ளதாக நியூசிலாந்து பிரதமர் ஜெசிண்டா ஆர்டர்ன் நேற்றைய தினம் அறிவித்துள்ளார். நியூசிலாந்து பிரதமரின் அறிவிப்பிற்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பினைத் தெரிவித்துள்ளனர்.



## ஈராக்கில் அமெரிக்கப் படைத்தளம் மீது ஆளில்லா விமானம் ரொக்கெட் தாக்குதல்

ஈராக்கில் அமெரிக்கப் படைத்தளம் அமைந்துள்ள விமானநிலையத்தை குறிவைத்து ஆளில்லா விமானம் மூலம் ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஈரான் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் ஐ.எஸ்., அல்கொய்தா பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஈராக் நாட்டில் அமெரிக்கப் படைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. அமெரிக்கப் படையினர் ஈராக் நாட்டில் படைத்தளங்களை அமைத்து அங்கிருந்தவாறு ஈரான், சிரியா உள்ளிட்ட நாடுகளில் செயல்பட்டு வரும் பயங்கரவாதக் குழுக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதற்கிடையில், ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படையினரைக் குறிவைத்து ஈரான் ஆதரவு தீவிரவாதக் குழுக்கள் அவ்வப்போது தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றன.



ஈராக் நாட்டின் தன்னாட்சி பெற்ற மாகாணமான குர்திஷ்தானில் உள்ள எர்பில் நகரில் சர்வதேச விமான நிலையத்தின் ஒருபகுதியில் அமெரிக்க படையினர் படைத்தளம் அமைந்துள்ளது. அந்தப் படைத்தளத்தை குறிவைத்து நேற்று ஆளில்லா விமானம் மூலம் ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என அமெரிக்க அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரொக்கெட் தாக்குதல் ஈரான் ஆதரவு வழங்கும் பயங்கரவாதக் குழுக்களால் நடத்தப்பட்டது என குர்திஷ்தான் அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## மியன்மாரில் மருத்துவ தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச்சூடு



# ஒருவர் உயிரிழப்பு; பலர் படுகாயம்

மியன்மார் நாட்டில் நடந்த பொதுத்தேர்தலுக்குப் பின்னர் அந்த நாட்டின் இராணுவம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஆங் சாங் சூ கி தலைமையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை இராணுவம் வெளியேற்றியது. அத்துடன் சூ கி உள்ளிட்ட மூத்த அரசியல் தலைவர்களைக் கைது செய்து வீட்டுச்சிறையிலும் வைத்தது.

மியன்மார்ரில் ஜனநாயக ரீதியிலான அரசை ஏற்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. மியான்மர் இராணுவ ஆட்சியாளர்கள் மீது அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதித்தன. சூ கியை விடுதலை செய்ய வேண்டும் என்று ஐ.நா. சபை வலியுறுத்தியது. ஆனாலும் இராணுவம் இதற்கெல்லாம் இன்றளவும் செவி சாய்க்கவில்லை.

அதேநேரம், அங்கு தொடர்ந்து மூன்றாவது மாதமாக இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், ஜனநாயக ஆட்சிக்கு ஆதரவாகவும் பல தரப்பினரும் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். ஆனால் போராட்டக்காரர்களை இராணுவம் கடுமையான வழிமுறைகளைப் பயன்படுத்தி ஒடுக்கி வருகிறது. இதற்கு எதிராகவும் சர்வதேச அளவில் பலத்த குரல்கள் எழுந்து வருகின்றன.

மியன்மாரில் திங்கியன் என்று அழைக்கப்படுகிற 5 நாள் புத்தாண்டு விடுமுறை கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கியது. ஆனால், ஜனநாயக ஆதரவு இயக்கத்தினர், தங்கள் வழக்கமான கொண்டாட்டங்களை ரத்து செய்து விட்டு இராணுவ ஆட்சி மீதான எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையில் போராட்டங்களில் கவனம் செலுத்தி வந்தனர்.

இந்த நிலையில், அந்த நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான மாண்டலேவில் நேற்று அறவழிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து மருத்துவ தொழிலாளர்கள் பெரிய அளவில் கூடி இருந்தார்கள். ஆனால் அவர்களை விரட்டியடிப்பதற்காக அங்கு இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை உருவானது.

போராட்டக்காரர்களில் பலரைச் சுற்றி வளைத்துக் கைது செய்த இராணுவத்தினர், துப்பாக்கிச் சூட்டினையும் நடத்யுள்ளனர் என செய்திகள் வெளியாகியுள்ளன. இதனால் போராட்டக்காரர்கள் நாலாபுறமும் சிதறி ஓடியுள்ளனர். அந்தப்பகுதியில் உள்ள மசூதி வளாகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார் எனவும் பலர் படுகாயம் அடைந்தார் எனவும் கூறப்படுகிறது.

மசூதி அருகேயுள்ள பகுதியில் வசிக்கிற ஒருவர் இதுபற்றி கூறும்போது, மசூதி வளாகத்தினருகே இராணுவத்தினர் வந்த உடனேயே துப்பாக்கிச்சூட்டைத் தொடங்கி விட்டனர். அதில் ஒருவர் படுகாயம் அடைந்து மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். மசூதிப் பகுதியில் போராட்டம் எதுவும் நடக்கவில்லை. ஆனாலும் அங்கே யாரேனும் இருக்கிறார்களா எனத் தேடி வந்த இராணுவத்தினர் உடனடியாகவே சுடத்தொடங்கிவிட்டனர் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே மியன்மார் அரசியல் கைதிகளுக்கான உதவிச் சங்கம், இதுவரை அங்கு நடந்த போராட்டங்களில் 715 எதிர்ப்பாளர்களை இராணுவம் கொன்று குவித்துள்ளார்கள் என குற்றஞ்சாட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சோமாலியாவில் பயங்கரக் குண்டுவெடிப்பு சிறிய ரக பஸ்ஸில் பயணித்த 17 பேர் பலி




நேற்று முன்தினம் சோமாலியாவின் தலைநகரான மொகாதிசுவில் சாலையோரம் புதைத்து வைத்திருந்த குண்டுகள் வெடித்ததில் சிறிய ரக பஸ்ஸில் சென்ற 17 பேர் உயிரிழந்தனர். 2 பேர் படுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

குண்டுவெடிப்பில் சிக்கிய சிறிய ரக பஸ், மொகாதிசு நகரிலிருந்து மிடில் சாபெல்லி என்ற இடத்துக்கு சென்றுக் கொண்டிருந்ததாக தகவல்கள் கூறுகின்றன. இதுகுறித்து தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் விரைந்து வந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த நாசவேலைக்கு அல் சபாப் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த சாலையோர குண்டு வெடிப்பு சம்பவம் சோமாலியாவை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சோமாலியா நாட்டில் அல்கொய்தா அமைப்புடன் நெருங்கிய தொடர்பில் உள்ள அல் சபாப் என்ற அமைப்பினர் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவ்வப்போது அவர்கள் அந்த நாட்டில் தாக்குதல்களையும் நாசவேலைகளையும் அரங்கேற்றி வருவதாக சோமாலிய அரசாங்கம் குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய தூதரக அதிகாரிகளை வெளியேற அமெ. அரசு உத்தரவு

அமெரிக்காவில் அரசின் முக்கிய துறைகளான உள்நாட்டுப் பாதுகாப்பு, நிதி மற்றும் வர்த்தகம் உட்பட 9 அரசுத் துறைகளில் பயன்படுத்தப்படும் கணினிகளில் ரஷ்ய ஹக்கர்கள் கடந்தாண்டு ஊடுருவி உளவு பார்த்த சம்பவம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது. இதன் பின்னணியில் ரஷ்ய அரசு இருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.



இது மட்டுமன்றி அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் டொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மறைமுகமாக உதவி செய்ய முனைந்த தாகவும் ரஷ்யா மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், ரஷ்யாவின் இந்த நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா நேற்று பதிலடி கொடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

தனது நாட்டில் செயல்பட்டு வரும் ரஷ்ய தூதரகத்தின் 10 அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேற அமெரிக்கா உத்தரவிட்டுள்ளதாக அமெரிக்க தகவல்கள் தெரிவித்தன. அத்தோடு, ரஷ்யாவில் இருந்து அமெரிக்காவுக்கு எதிராகச் செயல்படுபவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட 30 தனிநபர்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் மீதும் பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்துள்ளமையும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லர் போன்ற ஆட்சியை கோட்டா செய்யவா அவருக்கு வாக்களித்த மக்கள் விரும்புகின்றனர்?

## திலுமின் கருத்துக்கு ரிஷாத் பதில்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஹிட்லரை போன்று ஆட்சியை முன்னெடுக்க வேண்டும் என்பதே, அவருக்கு வாக்களித்த 69 லட்சம் மக்களின் எதிர்பார்ப்பு என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அண்மையில் வெளியிட்ட கருத்து தொடர்பில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் டுவிட்டர் பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமர் ரீ.ரி.யூ.ம்.பண்டார நாயக்க ஆகிய இருவரும் தேசிய வாதத்தின் வாக்குறுதியின் பெயரில் ஆட்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ராஜபக்ஷ ஹிட்லரைப் போன்று இருக்க வேண்டுமென்று திலும் அமுனுகம கூறியுள்ளார்.

மாப்பிட்டிகம புத்த ரக்கிட்ட தேரருக்கும் பண்டார நாயக்கவிடமிருந்து இது போன்ற எதிர்பார்ப்பே இருந்தது. அது எப்படியான முடிவொன்றுக்கு கொண்டு சென்றது என்பதை நாங்கள் அறிவோம் என ரிஷாத் எம். பி தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் ஹிட்லர் தொடர்பான இந்த சர்ச்சைக் குரிய கருத்துக்கு, இங்கைக்கான ஜேர்மன் தூதுவர் பதிலளிக்கையில், அடால்ஃப் ஹிட்லர் எந்தவொரு அரசியல்வாதிக்கும் முன்மாதிரியானவர் அல்ல என தனது டுவிட்டரில் பதிவிட்டிருந்தார்.

அது மாத்திரமன்றி, இந்த அரசாங்கத்தை பதவிக்கு கொண்டுவர பாடுபட்ட முக்கியமானவர்களில் ஒருவரான முருத்தட்டுவே ஆனந்த தேரர், இது தொடர்பில் கூறுகையில், ஹிட்லர் பாணியிலான ஆட்சியை நாட்டுக்குக் கொண்டுவர வேண்டுமென யாராவது சொன்னால், அதற்கு மக்கள் விரைவில் பதிலளிப்பார்கள் என்று, தெரிவித்துள்ளார் எனவும், ரிஷாத் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

# சவுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த 41 பணிப்பெண்கள்

இலங்கையை சேர்ந்த 41 பணிப்பெண்கள் சவுதி அரேபியாவில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அம்னஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள குறித்த அமைப்பு, 18 மாதங்களாக குறித்த பணிப்பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண்கள் மீது எந்தவிதமான குற்றச் சாட்டுகளும் இதுவரையில் பதிவு செய்யப்படவில்லை எனவும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்காக எந்த காரணமும் தெரிவிக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பெண்களுள் மூன்று சிறு குழந்தைகளும் உள்ளனர் எனவும் அவர்கள் அனைவரையும் விரைவில் நாட்டிற்கு அழைத்து வர இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிலவ வருடத்தின் முதலாவது வெள்ளிக்கிழமை விசேட பூசை

மட்டக்களப்பு மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பிலவ வருடத்தின் முதலாவது வெள்ளிக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் இன்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரன் அவர்களது ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் இடம்பெற்ற இவ்விசேட பூசை வழிபாட்டினை மாவட்ட செயலக கணக்குக் கிளை மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றிருந்தது.

விசேட பூசை வழிபாட்டினை மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ உ.ஜெகதீஸ்வரக் குரு நடாத்தியிருந்ததுடன், பூசை வழிபாடுகளில் அதிகளவிலான உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தென்னையில் ஏறியவர் சாவு

மட்டக்களப்பு, ஏப்.16

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருக்கள்மடம் பகுதியில் உள்ள தோட்ட காணியொன்றில் ஆணொருவர் தென்னை மரத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள் எனர்.

தேவாலய வீதி, மகிளூரைச் சேர்ந்த 59 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தென்னம் பதநீர் இறக்குவதற்காக தென்னை மரத்தில் ஏறிய நபரை மிக நீண்ட நேரமாகியும் காணவில்லையென தேடிய போது, தென்னை மரத்தின் வட்டிற்குள் மூச்சுப் பேச்சு அற்ற நிலையில் இருந்ததைக் கண்டதனைத் தொடர்ந்து களுவாஞ்சிகுடி ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது குறித்த நபர் இறந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக களுவாஞ்சிகுடி பொலிஸார் குறித்த சடலத்தினை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளதுடன், களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் சடலத்தை பார்வையிட்டதன் பின்னர் சடலத்தை பிரேத பரிசோதனைக் குட்படுத்தும் படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.






# சட்டவிரோத மணல் கடத்தலுக்குப் பயன்படுத்திய ஆறு உழவு இயந்திரங்களுடன் ஆறு பேர் கைது



மட்டக்களப்பு வெருகல் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்விற்குப் பயன்படுத்தப்பட்ட ஆறு உழவு இயந்திரங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றின் சாரதிகள் ஆறு பேர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என வாகரை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். என்.ஐ. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் எதிர்வரும் 21 ஆந் திகதியன்று வாகரை நீதிமன்றில் ஆஜராகவேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தலைமைக்காரியாலய பொலிஸாரும் வாகரை பொலிஸாரும் இணைந்து இச் சட்டவிரோத நடவடிக்கையினை முறியடித்துள்ளனர்.

அனுமதிப்பத்திரம் பெறப்படாமை மற்றும் அனுமதிப் பத்திர விதிமுறைகளை மீறியமை ஆகியன இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களாகும்.

# கிழக்கில் பெண் உட்பட ஐவர் மின்னல் தாக்குதலில் படுகாயம்

மட்டக்களப்பு மாவடிவேம்பு, கிருமிச்சை பிரதேசங்களில் இடிமின்னல் தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் உட்பட 5 பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று (15 ஆம் திகதி) இடம்பெற்றுள்ளது.

கடந்த சில தினங்களாக கடும் வெயில் ஏற்பட்டுள்ள நிலையில் திடீர் காலநிலை மாற்றத்தினால் நேற்று வியாழக்கிழமை மாலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடி மின்னலுடனான கடும் மழைபெய்தது.

இந்த நிலையில் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிவேம்பு பிரதேசத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த 4 ஆண்கள் இடி மின்னல் தாக்கத்தினால் படுகாயமடைந்ததுடன் அதேவேளை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிருமிச்சை பிரதேசத்தில் வீட்டில் ஜன்னல் அருகே இருந்த பெண் ஒருவர் இந்த இடிமின்னல் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்தார்.

இந்த ஐவருமே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் 4 ஆண்கள் சிகிச்சை பெற்று இன்று மாலை வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். பெண் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகிறார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இந்த இடிமின்னல் தாக்குதலில் முல்லைத்தீவில் 3 பேர் மட்டக்களப்பு வெல்லாவெளியில் ஒருவர் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





## ஐ.பி.எல். 2021

# டெல்லியை வென்றது ராஜஸ்தான்!

ஐ.பி.எல். 2021 தொடரின் ஏழாவது லீக் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 3 விக்கெட்டுக்களால் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை வென்றது.

மும்பை மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் ரிஷப் பந்த் 51 ஓட்டங்களையும் டொம் கரன் 21 ஓட்டங்களையும் சேர்த்தனர். ஒரு கட்டத்தில் 37 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய அணியை ரிஷப் பண்ட் போராடி மீட்டெடுத்திருந்தார். ராஜஸ்தான் அணியின், உனட்கட் 3 விக்கெட்டுக்களையும் முஷ்டபிசுர் ரஹ்மான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

148 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் வெற்றி இலக்கை அடைந்தது. டேவிட் மில்லர் 62 ஓட்டங்களையும் கிறிஸ் மொறிஸ் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இறுதி ஓவர்களில் அதிரடியாக விளையாடிய கிறிஸ் மொறிஸ் அடித்த நான்கு சிக்ஸர்கள் ராஜஸ்தான் அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்திருந்தன.

டெல்லி அணியின் அவேஷ் கான் 3 விக்கெட்டுக்களையும் கிறிஸ் வோக்ஸ் மற்றும் ரபாடா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ்தானின் வேகப்பந்துவீச்சாளர் ஜெய்தேவ் உனட்கட் தெரிவானார். இந்தப் போட்டியின் வெற்றியோடு ராஜஸ்தான் ரோயல்ஸ் 2 புள்ளிகள் பெற்று அணிவரிசைப் பட்டியலில் ஐந்தாமிடத்துக்கு முன்னேறியுள்ளது.

# இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்கான ஊதிய ஒப்பந்தப் பட்டியல் வெளியானது



இந்தியக் கிரிக்கெட் அணி வீரர்களுக்கான ஊதிய ஒப்பந்த விவரத்தை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ளது.

ஏ ப்ளஸ் பிரிவில் இடம் பிடித்துள்ளவர்களுக்கு 7 கோடி ரூபாவும், ஏ பிரிவில் இடம் பெற்றுள்ளவர்களுக்கு 5 கோடி, பி பிரிவில் இடம் வழங்கப்பட்டோருக்கு 3 கோடி, சி பிரிவில் உள்ளவர்களுக்கு ஒரு கோடி ரூபாக்களும் ஒப்பந்தத் தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 2020 முதல் 2021 செப்ரெம்பர் மாதம் வரையான இந்த ஒப்பந்தத்தில் கடந்த பட்டியலில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, வொஷிங்டன் சுந்தர், மொஹமட் சிராஜ் மற்றும் அக்ஸர் பட்டேல் ஆகியோர் 2020 - 2021ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் இடம் பிடித்துள்ளனர்.

2019 – 2020ஆம் ஆண்டு பி பிரிவில் இருந்த ஹார்திக் பாண்ட்யா, தற்போது ஏ பிரிவிற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளார். ஏ பிரிவில் இடம்பெற்றிருந்த புவனேஷ்வர் குமார், தற்போது பி பிரிவிற்கு பின் தள்ளப்பட்டுள்ளார். கேதர் ஜாதவ், மனிஷ் பாண்டே இருவரும் ஒப்பந்தத்தில் இடம்பெறவில்லை.

ஏ ப்ளஸ் பிரிவில் விராட் கோலி, ரோஹித் சர்மா மற்றும் ஜஸ்பிரிட் பும்ரா ஆகியோரும், ஏ பிரிவில் அஷ்வின், ஜடேஜா, புஜாரா, ரஹானே, தவான், கே.எல் ராகுல், மொஹமட் ஷமி, இஷாந்த் சர்மா, ரிஷப் பண்ட், ஹார்திக் பாண்ட்யா ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

பி பிரிவில் ரித்திமான் சாஹா, உமேஷ் யாதவ், ஷர்துல் தாகூர், மயங்க் அகர்வால் ஆகியோருக்கும், சி பிரிவில் குல்தீப் யாதவ், நவ்தீப் சைனி, தீபக் சாஹர், சுப்மான் கில், ஹனுமா விஹாரி, ஷ்ரேயாஸ் அய்யர், வொஷிங்டன் சுந்தர் ஆகியோருக்கும் இடம் வழங்கப்பட்டுள்ளது.



## ஐ.பி.எல். 2021

# இன்று பஞ்சாப் – சென்னை அணிகள் மோதுகின்றன!

ஐ.பி.எல். 2021 தொடரின் எட்டாவது லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், பஞ்சாப் கிங்ஸ் அணியும் இன்று மோதவுள்ளன.

சென்னை அணி தனது முதல் லீக் போட்டியில் டெல்லி அணியிடம் படுதோல்வியைச் சந்தித்தது. ஆனால் பஞ்சாப் அணி, ராஜஸ்தான் அணியுடனான தனது முதலாவது போட்டியில் வெற்றிபெற்றிருக்கிறது. ஆகவே இன்றைய போட்டியில் சென்னை அணி தனது முதலாவது வெற்றிக்காக களமிறங்கும் அதே நேரம், பஞ்சாப் அணி தனது வெற்றிப் பயணத்தைத் தொடர முயற்சிசெய்யும்.

இரு அணிகளும் இதற்கு முன்னதாக 23 முறை ஒன்றையொன்று எதிர்கொண்டுள்ளன. இதில் 14 முறை சென்னை அணியும் 9 முறை பஞ்சாப் அணியும் வெற்றிபெற்றுள்ளன. மும்பையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

# சூதாட்டப் புகார் விசாரணை முடிவில் ஹீத் ஸ்டிரிக்குக்கு 8 ஆண்டுகள் தடை



சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான 47 வயது ஹீத் ஸ்டிரிக்குக்கு 8 வருடங்கள் உத்தியோகபூர்வமாக கிரிக்கெட்டோடு பங்கெடுக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிம்பாப்வே அணியின் பயிற்சியாளராகவும் ஐ.பி.எல்., பங்களாதேஸ் பிரீமியர் லீக் மற்றும் ஆப்கானிஸ்தான் பிரிமீயர் லீக் போட்டிகளில் அணிகளின் பயிற்சியாளராகவும் இருந்துள்ள இவர், 2017, 2018 ஆம் ஆண்டுகளில் பயிற்சியாளராக இருந்தபோது சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் (ஐ.சி.சி.) ஊழல் தடுப்பு விதிமுறைக்கு மாறாக நடந்தார் என குற்றச்சாட்டு எழுந்தது.

அவர் அணி குறித்த தகவல்களை வெளிநபர்களுக்கு அளித்தார் எனவும், வீரர்களை சூதாட்ட நபர்கள் அணுக ஆதரவாக இருந்ததாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து ஐ.சி.சி. ஊழல் தடுப்பு பிரிவினர் விசாரணை நடத்தியிருந்தனர். அவர் தன் மீதான குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டதையடுத்து, ஹீத் ஸ்டிரிக்குக்கு 8 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவர் 2029 ஆம் ஆண்டு மார்ச் 28 ஆம் திகதி வரை உத்தியோகபூர்வமாக கிரிக்கெட் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

# டோக்கியோ ஒலிம்பிக் போட்டி ரத்தாகலாம்?

ஜப்பான் நாட்டின் ஆளும் கட்சியின் தலைவர்களில் ஒருவரான டோஷிஹிரோ நிகாய் அளித்த ஒரு பேட்டியில், 'கொரோனாத் தொற்று



பரவல் மேலும் அதிகரித்து மோசமான சூழ்நிலை உருவானால் டோக்கியோ ஒலிம்பிக் போட்டி இரத்துச் செய்யப்படலாம்' என்று தெரிவித்துள்ளார்.

ஜப்பான் அரசாங்கம் அவசரகால நிலையை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர், டோக்கியோவில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்று மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

ஜுலை 23 ஆம் திகதி தொடங்கவுள்ள டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்கான சமூக தொலைதூர நடவடிக்கைகள் மற்றும் பார்வையாளர்கள் மீதான கட்டுப்பாடுகளை உள்ளடக்கிய பணிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு இன்னும் மூன்று மாதங்களே உள்ள நிலையில், அதிகளவான நிச்சயமற்ற தன்மை தற்சமயம் உருவாகியுள்ளது.

கைடோ செய்தி நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட கருத்துக் கணிப்பிலும் 70 வீதத்துக்கும் அதிகமான ஜப்பானியர்கள் ஒலிம்பிக் போட்டிகளை ஒத்திவைக்க அல்லது ரத்துச் செய்வதற்கு ஆதரவாக இருப்பது தெரியவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளின் கொரோனா தொடர்பில் இலங்கை அதிக கவனம் செலுத்துகிறதாம்

## இராணுவத் தளபதி கூறுகின்றார்

அண்டைய நாடுகளில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்பில் இலங்கை அக்கறை கொண்டுள்ளது என கொவிட் கட்டுப்பாடு தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரான இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் பேசிய அவர் –

அண்டைய நாடுகளில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது தொடர்பில் இலங்கை அக்கறை கொண்டுள்ளது.

இதன் காரணமாகவே, நாட்டுக்குத் திரும்புவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தனிமைப்படுத்தப்பட்ட செயல்முறையை நாங்கள் எப்போதும் கடைப்பிடித்து வருகின்றோம். தனிமைப்படுத்தப்பட்ட செயல்முறையை தளர்த்துமாறு சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

எனினும், பிராந்திய நாடுகளில் நிலைமையை கருத்திற்கொண்டே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இந்நிலையில், வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்கள் மூலம் கொவிட் – 19 தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, கடலுக்குச் செல்வோர் குறிப்பாக மீனவர்கள் வெளிநாட்டு நபர்களுடன் தொடர்புகொள்வதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இதன் மூலம் கொவிட் தொற்று பரவக் கூடும்.

பண்டிகைக் காலத்திற்குப் பின்னரான கொவிட் – 19 நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இராணுவத் தளபதி –

நிலைமையை அதிகாரிகள் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர் எனத் தெரிவித்தார். அடுத்த வரவிருக்கும் நாள்களில் நிலைமையைப் பொறுத்து



தகுந்த நடவடிக்கைகளை எடுப்போம்' எனத் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் அமைப்புக்களின் தடை ஜனநாயக விரோதச் செயற்பாடு

## முஜிபுர் ரஹ்மான் காட்டம்



முஸ்லிம் அமைப்புக்களை தடை செய்திருக்கின்றமை ஜனநாயக விரோத நடவடிக்கை என்பதுடன் சட்டமா அதிபரின் நடவடிக்கையும் பக்கச்சார்பானதுமாகும். அவர் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறே செயற்படுகின்றார் என கொழும்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

11 முஸ்லிம் அமைப்புக்களை நாட்டில் தடைசெய்து வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பது தொடர்பில் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஏப்ரல் குண்டு தாக்குதல் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு 11 முஸ்லிம் அமைப்புகளை அரசாங்கம் தடை செய்திருக்கின்றது.

ஆனால் இந்த அமைப்புகள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் நிலையில் முஸ்லிம் அமைப்புகளை அரசாங்கம் தடைசெய்திருக்கின்றமை ஜனநாயக விரோத செயலாகும்.

அத்துடன் ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் அடிப்படைவாத அமைப்புக்களைத் தடைசெய்ய வேண்டும் எனப் பொதுவாகத் தெரிவித்திருப்பதுடன் பொதுபல சேனாவைத் தடைசெய்யவேண்டும் என நேரடியாகவே குறிப்பிட்டிருக்கின்றது.

அப்படி இருக்கும்போது தாக்குதலுடன் எந்த சம்பந்தமும் இல்லாத முஸ்லிம் அமைப்புகளை மாத்திரம் தடைசெய்திருக்கின்றமை சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான நடவடிக்கையாகும். பொதுபல சேனா அரசாங்கத்துக்குத் தேவையான அமைப்பு. அரசாங்கத்துக்கு உதவி வருகின்ற அமைப்பு என்றபடியாலே அதனைத் தடைசெய்யவில்லை.

மேலும் முஸ்லிம் அமைப்புகளை மாத்திரம் பெயரிட்டு அதனைத் தடைசெய்யவேண்டும் என சட்டமா அதிபரின் பரிந்துரை பக்கச்சார்பான நடவடிக்கையாகும்.

சட்ட அதிபர் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவகையில் செயற்படுகின்றார் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. அதனால் எந்தக் குற்றச்சாட்டும் இல்லாமல் தடைசெய்யப்பட்டிருக்கும் அமைப்புகள் நீதிமன்றம் சென்று தங்களது உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன் அரசாங்கம் தடைசெய்திருக்கும் அதிகமான அமைப்புக்கள் நாட்டில் கடந்த காலங்களில் பல சமூக சேவைகளை மேற்கொண்டுவந்திருக்கும் அமைப்புகளாகும். தடைசெய்யப்பட்டிருக்கும் அமைப்புகளில் சில அமைப்புகள் வெளிநாட்டு அமைப்புகளாகும்.

அவை தொடர்பில் நாங்கள் அலட்டிக்கொள்ளவில்லை. ஏனைய அமைப்பைச்சேர்ந்தவர்கள் கடந்த காலங்களில் பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் ஈடுபட்டிருந்தால், அது தொடர்பில் விசாரணை நடத்தியே நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த அமைப்புகளுடன் அரசாங்கமும் கலந்துரையாடவேண்டும். மேலும் அமைப்புகளைத் தடைசெய்து பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் பிரச்சினை மேலும் பூதாகரமாகும் நிலைமையே ஏற்படும்.

அதனால் அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விராதே நடவடிக்கையை ஒருபோது ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு எதிராக நீதிமன்றம் சென்று எமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.– என்றார்.

# 48 மணி நேரத்தில் விபத்துகளில் 30 பேர் சாவு; 150 பேர் படுகாயம்

கடந்த 24 மணிநேரத்தில் வீதி விபத்துக்களில் சிக்குண்ட 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 80 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 8 பேர் கடந்த வியாழக்கிழமை நடந்த விபத்துக்களில் சிக்கி உயிரிழந்தவர்கள் ஆவர். ஏனையோர் அதற்கு முன்னர் நடந்த விபத்துக்களில் சிக்கி படுகாயமடைந்தவர்கள் ஆவார்.

அதேநேரம் கடந்த புதன்கிழமை வீதி விபத்துக்களில் சிக்குண்ட 14 பேர் உயிரிழந்துள்ளதுடன், 74 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹன தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக கடந்த 48 மணிநேரங்களில் வீதி விபத்துக்களில் சிக்குண்ட 30 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 150 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் அதிகளவானோர் மோட்டார் சைக்கிள் சாரதிகள் ஆவர்.

# பொலிஸார் அதிரடி வேட்டை; ஒரே நாளில் 758 பேர் கைது

இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 758 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மதுபோதையில் அல்லது போதைப்பொருளைப் பயன்படுத்தியவாறு, வாகனத்தைச் செலுத்திய நிலையில் கைதுசெய்யப்படும் சாரதிக்கு, காவல்துறை பிணை வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவதுடன், அவர் செலுத்திவந்த வாகனமும் காவல்துறையால் பொறுப்பேற்கப்படும் என்பதுடன், மதுபோதையில் இருந்த நபருக்கு, வாகனத்தை செலுத்த வழங்கியமை தொடர்பில், குறித்த வாகனத்தின் உரிமையாளருக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்படும் என்றும் காவல்துறை ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு துறைமுக நகரம் தனிநாடாக மாறும் அபாயம்

## எச்சரிக்கின்றார் விஜயதாஸ ராஜபக்ஷ

கொழும்பு துறைமுக நகரம் தனிநாடாக மாறக்கூடிய அபாயம் உருவாகியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு குறித்த சட்ட மூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். நாரஹேன்பிட்டி அபயாராமயவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் கொழும்பு துறைமுக நகர் இந்த நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பிலிருந்து விடுபட்ட ஒரு பகுதியாக உருவாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பகுதிகள் சீனாவிற்கு விற்பனை செய்யப்படுவதால் சீனாவிற்கும்



பலம்பொருந்திய நாடுகளுக்கும் இடையிலான அதிகாரப் போட்டியில் சிக்குண்டு இலங்கையில் பாரியளவு உயிரிழப்புக்கள் ஏற்படக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த அரசாங்கம் ஊழல் மோசடிகளை நிறுத்துவதாக கூறிய போதிலும் அவ்வாறு கிடையாது எனவும் சீனி இறக்குமதி மோசடியில் பாரியளவு இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையில் அதிவேக நெடுஞ்சாலைகளால் ஒரு வாரத்தில் 21 கோடி ரூபாவுக்கு மேல் வசூல்

இலங்கையில் உள்ள அனைத்து அதிவேக வீதிகள் ஊடாகவும் புத்தாண்டு தினமான கடந்த 14 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒரு வார காலத்தில் 21 கோடி ரூபாவுக்கும் அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையிலான 7 நாள்களில் மட்டும் அதிவேக வீதிகள் ஊடாக 21.033 கோடி ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது என அதிவேக பாதைகள் மேற் பார்வை, ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பிலான பதில் பணிப்பாளர் நிஹால் லொட்விக் தெரிவித்தார்.

இந்த ஒரு வார காலத்தில், நாளொன்றுக்கான அதிக வருமானம் கடந்த 10 ஆம் திகதி பதிவாகியுள்ளது என அவர் மேலும் கூறினார்.

கடந்த 10 ஆம் திகதி மட்டும் 4 கோடி ரூபாவை அண்மித்த வருமானம் கிடைக்கப் பெற்றதாகவும் 13 ஆம் திகதி 2 கோடி ரூபாவை அண்மித்த வருமானம் கிடைத்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

13 ஆம் திகதி கிடைக்கப் பெற்ற 2 கோடி ரூபாவை அண்மித்த வருமானமே குறித்த ஒரு வார காலப்பகுதியில் பதிவான குறைந்த வருமானமாகும்.

இந்த ஒரு வார காலத்தில் அதிக வருமானம் கிடைத்த கடந்த 10 ஆம் திகதி, ஒரு லட்சத்து 41 ஆயிரத்து 187 வாகனங்கள் அதிவேக வீதியூடாகப் பயணித்துள்ளதுடன், குறித்த வருமானமான 2 கோடி ரூபாவை அண்மித்த வருமானம் கிடைத்த 13 ஆம் திகதி 64 ஆயிரத்து 937 வாகனங்கள் அதிவேக பாதைகளைப் பயன்படுத்தியுள்ளன.

சிங்கள, தமிழ் புத்தாண்டு ஆரம்பிக்க முன்னரான 8, 9, 10, 11 ஆம் திகதிகளில் மட்டும் அதி வேக வீதி ஊடாக 14 கோடி ரூபா வரையிலான வருமானமும், அதனைத் தொடர்ந்து 12,13,14 ஆம் திகதிகளில் 7 கோடி ரூபாவுக்கும் அதிகமான வருமானமும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org